JAFFNA COLLEGE LIBRARY
APR 1 1941
VADDUKODDAI, CEYLON.

# THE young idea

# இளஞாயிறு

A STUDENT FORTNIGHTLY OF JAFFNA COLLEGE

FOR PRIVATE & INTERNAL CIRCULATION ONLY

| Vol. VI | Tuesday - 1st April, 1941 | No. 4 |
|---|---|---|

| | | page |
|---|---|---|
| JAFFNA ARISE! AWAKE!! | — 'PUGGY' | 2 |
| "WHITHER LADIES" | — WILL-A-MATHER | 3 |
| THE ROMANCE OF CO-EDUCATION | — JR. INTERS | 7 |
| பெரிய வீட்டுப் பெண்களுக்கு மாத்திரம் — | | 11 |
| தேவசபைக் கூட்டம் — | A. Nadarajah | 15 |

S. SIVANATHAN
English Editor.

K. LAKSHMANA IYER
Tamil Editor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eng. Editorial Board

**Editor :**

S. Sivanathan, Junior Inter Arts

**Associate Editors :**

K. Aiyadurai, Junior Inter Arts

C. W. Paramsothy, Lond. Matric

*Literary Section :-*

M. T. Jebaneson, Junior Inter Arts

R. Vyravapillai, Junior Inter Arts

V. Kanthasamythurai, Junior Inter Sc.

*News Section :-*

K. Saravanamuttu, Junior Inter Arts

*Sports Section :-*

S. Dharmaretnam, Lond. Matric

*Verse Section :-*

R. Thevarajah, Lond. Matric

*Coeds. Section :-*

Miss. R. Kandiah, Inter Arts

Miss. R. Appadurai, Lond. Matric

*Junior Section :-*

K. Balasundaram Pillai, Lond. Matric

S. Balaraman, Fifth Form

*Faculty Adviser :-*

Mr. C. A. Gnanasegaram, B. A.

## Tamil Editorial Board

**Editor:**

K. Lakshmana Iyer,

**Associate Editors :**

V. Kanapathipillai

A. Sivalingam, Inter Sc.

*Literary Section :-*

A. Ratnam, Jr. Inter Sc.

K. Jagatheesa Ayyar, Lond. Matric

N. S. Ratnasingam, London Matric

*Verse Section :-*

K. Aiyadurai, Jr. Inter Arts

*News Section :-*

C. Sivasubramaniam, Jr. Inter Arts

G. N. Wijayaratnam, Lond. Matric

K. Sathasivam, Lond. Matric

*Coeds. Section :-*

Miss. Nancy Bartlett, Inter Arts

Miss. Punithavathy Kandiah, L.M.D.

*Sports Section :-*

M. Tambimuttu, Lond. Matric

*Junior Section :-*

A. Kugarajah, IV-th Form

V. Kanthasamy, II-nd Form

*Faculty Adviser :-*

P. Navaratnam, B. A. (Hons.)

Cover Design by 'Sane' of the Eelakesari

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIBRARY
APR 1 1941
VADDUKODDAI, CEYLON

The

# young idea

A STUDENT FORTNIGHTLY OF JAFFNA COLLEGE

*FOR PRIVATE & INTERNAL CIRCULATION ONLY*

| Vol. VI | Tuesday - 1st April 1941 | No. 4 |
|---|---|---|

# Editorial Notes

## Federation

The dust of many an old controversy has settled down. But the question of the possibility of a world federation is still in the air. Is there the slightest possibility of a world federation? Countries like the U. S. A. and individuals like Gandhi, are hopefull and are working towards this end. No federation is possible unless individuals, castes, races and countries are prepared to treat one another with justice, equality and friendship. The barriers of caste, creed, colour, chauvinism, capitalism, imperialism and the various 'isms' should be overcome. Above all equality should be maintained if any federation is to succeed. All individuals ought to have equal rights and the economic system must be well balanced to the benefit of all.

## Plagiarism

We regret to note that the article on "The Nobel Prize" in the last issue of the Y. I. has been a copy of Mr. Kapadia's article in the August (1939) issue of "The Good Books".

## Championship

The "Battle of the Blues" of North Ceylon ended in a victory for Jaffna College. St. Patricks fought valiantly to the last but eventually our team proved to be superior. Undoubtedly Goonaratnam was the hero of the thrilling match. His splendid "catch", and four "sixes" are mainly responsible for the victory. Kandiah deserves mention for his marvellous bowling feat in the second innings. Jaffna College has at last snatched away the much coveted cricket

*(Continued on page 2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna, Arise! Awake!!

By **'PUGGY'** Jnr. Inter.

Jaffna has been and is humorously termed "The Scotland of Ceylon". Not only is there a similarity between Jaffna and Scotland in their geographical position but also there is an irrefutable similarity in their people's morals and characteristics.

Jaffna is proud of her past glory and heritage. Time was when the Jaffnese held pride of place in social reform, and political leadership. Jaffna's sons have shone brilliantly in different spheres of life. The fame and glory of Jaffna was not confined within the bounds of this island but spread to the West and East by the ability and efficiency of her sons. A glorious past indeed!

But now what do we find. 'Alas! a complete breakdown, and anticlimax". Never before has there been such economic distress, political discontent, social unrest and religious neglect as at present. We are not a united community now. We are a small community yet we are split up. There is no team work. We find a hundred and one political and other associations which do nothing beyond lip-service. Whenever a move is made to have something effected there inevitably come a dozen oppositions and obstructions. For instance the 'Municipality for Jaffna' question. When all the brilliant sons of Jaffna are combatting against each other how can Jaffna uphold her ancient glory and heritage. Fault finding and speech making seem to be the order of the day. Our Tamil boys are ashamed to speak their mother tongue but delight to revel in making thousand grammatical mistakes in an English sentence. Jaffna now is a land of the disunited, the dissatisfied and the lazy. The industry, honesty and integrity for which the Jaffna man was once famous are now gone. While other communities are progressing we, the Tamils are degrading. We must at least now pause apply the brakes and ask ourselves 'whither Jaffna'? I personally think that the chief defect we suffer from is the lack of a leader. We have no leader. Everybody wants to be a leader. It is really a heart-rending thing for us to state the present perilous state of Jaffna but facts have to be faced at any cost.

It is now up to us, boys and girls, citizens of the future generations to lift up Jaffna from her present state. To do that we need men of action and ability. Let us all sink our differences, think broad mindedly, and act justly. I myself may be called a cynic for blaming the present generation but pardon me, gentle readers, we have to speak the truth. May Jaffna regain her ancient culture and heritage, her past fame and glory, her pride of place as leader of thought and her ancient political, economic, social and religious standing. May Jaffna yet produce sons of the calibre and broad mindedness of Sir Ponnambalam Ramanathan, in his early days, Sir P. Arunachalam and Sri-La-Sri Arumuga Navalar.

*[Jaffna certainly must progress, but not along communalistic lines. Ed. Y. I.]*

---

*(Continued from page 1)*

crown from St. Patricks. However we ought not to be too optimistic about the match against Jaffna Hindu College; but the captain and the team as a whole have assured us of victory. Our congratulations and thanks are due to every member of the team for the part he has played in earning the crown.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Whither Ladies"

*By* ***Will - A - Mather***

WHAT a cruel age! Women everywhere. Women in the whirring factories figure like Martials and Masters; Women at the writing desks sway and govern large groups of men. Women in the theatre; women at the Altar. Women creeping into public halls; women opening the ball; women in the Cabinets; women in Colleges. Women in the seas and, my heavens! women whirring in the skies!

Then, just imagine the fate of man! Poor men are daily being unseated in every office by ungracious women. The women have all, or almost all renounced their kingdom of the kitchen in order to take up duties which were so far confined to men alone. They no longer eat the entrees they make; they dine on the entrees made by Martin or Manican. Of course man has taken her place in the kitchen. Just imagine man cleaning the utensils, lulling the baby on his knee, while her majesty the woman goes out to visit her friends. But also see, in what a fools' paradise the women are living! Should they shirk their duty — cooking and cleaning — in order to record their names in biography? What a disdainful pursuit? Patient and persevering women in the past have recorded their names in biography because they did their duty. The instances of obstacles which Savitri surmounted in order to be delightful to her husband must be a lesson to our modern women.

Today, it is the woman who brings man to book. Man cannot get out of his house after 6 p. m. He cannot talk wtih ladies other than his wife. He is even forbidden to chew or smoke. Man must look upon every trumpery command by the woman as a law. Or else, he stands to be even slapped by her majesty, the woman. Still, what a shame! man calls her the "gentle sex".

Forty or fifty years ago, especially women of Jaffna seldom got out of their homes. Their place was then something sacred. They never dreamt of getting secondary education or preparing for London degrees. But today, they no longer live in oriental seclusion. Now it is the Jaffna woman who is at the head of processions, public galleries and pompus carnivals.

Therefore, men, bestir yourselves. It is you who are born to rule. Remember, what Knox said in his "Regiment of Women": "To promote a woman to bear rule, superiority, dominion or empire above any realm, nation or city is repugnant to nature, contumely to God, a thing most contravious to His revealed will and approved ordinance; and finally it is the subversion of good order of all equity and justice."

[*We do not share the views expressed here—Ed. Y. I.*].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHYSICAL CULTURE

By **M. A. Mahendran**

THIS is a subject of great importance to the class of persons for whom this article is meant. In primitive society, where man earned his living by the sweat of his brow, an article of this nature would have been profitless.

But under conditions in which we live today, the weak man goes on dragging a miserable existence. The man who is weak today, can if he has the money, prolong his existence with the aid of artificial devices. One day of glorious life is certainly better than a hundred years of miserable existence.

The primitive man sweated in the ordinary business of his life. But slowly and steadily, with the advance of civilization, man has been trying to escape this 'sweating business', he made slaves of fellow beings, domesticated animals and designed mechanical devices to do all the sweating. But there is no way out of this sweating business, whether our position in life be small or big, whether we drive cattle or quills, sweat we must, at least for half an hour a day.

The common complaint of the student, that he has no opportunity for developing his physique is not true. We can exercise our bodies adequately even when we walk to and from school. I do not intend to suggest any system of exercise. That is a matter for each individual to choose for himself. Ordinary games like cricket, soccer, tennis and basket-ball may suit all, but strenuous exercises should never be undertaken except with the guidance of a tutor "One man's food is another man's poison" and we may say one man's exercise is another man's ruin.

Physical culture is a science. Hit or miss methods will bring you no worthwhile result. Do not take to physical culture to attain the proportions of a Hackenshmidt or a Grimeck; to aim high is commendable but to expect the impossible is foolish. Choose an ideal from among the athletes that belong to your "type". Having decided your ideal, it is left to you now to adopt the methods of exercise to the realisation of your ideal.

Three more things I wish to mention about exercises, a man who takes exercises must learn to enjoy them, so that not only are the muscles developed but the mind also is refreshed. The second thing is, that if a person takes a regular system, he will know if there is anything wrong in the machinery of his body, and can improve.

The third point to be emphazised is uniformity. Some persons by the nature of their work, develop certain parts of their body, while other parts remain undeveloped. Doctors advice a mixed diet, even so the physical culturist should insist on mixed exercises. Uniformity of development is very essential for true physical culture.

Good food, sound sleep, recreation and peace of mind are as essential as exercises.

What is the ultimate aim of physical culture? It is nothing but to enable us to tackle our daily problems more successfully, to enjoy our pleasures, to live our life more fully, to make us useful to ourselves and others. On the whole it promotes endurance and self confidence, which are great assets.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Discipline – The other side

**K. Sarawanamuttu** Jnr. Inter-Arts

AN eminent preacher once said that if the animal creation tried to conceive a religion, it would have difficulty in imagining God, — but it would have no difficulty in imagining the devil. So also, the Ceylonese and particularly we, the Jaffnese, have got so used to discipline both at home and at school, that we are unable to enjoy the light shed on humanity by liberty. But one can imagine the gloom that might set in, when a few institutions which kept the torch of liberty and humanity lit in the hearts of the Ceylonese, now lose sight of it deliberately, and no greater calamity can one percieve than that that light should be quenched. At a time when the world is in the throes of wars, when massacre is followed by massacre, when before our very face, every treaty and bond which society has devised for its common protection is being torn to ribbons and when we have seen gangsters of the type of Hitler and Mussolini passing "through terror to triumph", it is the duty of schools, colleges and universities to mould leaders — leaders who can think and act freely and justly. For this, Freedom should be the handmaid of education.

The danger to-day is that we are in a spirit of despair and fatalism, giving up the struggle and loosing that faith in humanity with which all is lost. It is that faith which infused a powerful moral influence in the affairs of this College and in the educational world. The most elementary liberties of life are disappearing from the face of this world and in the world the international structure of society is crumbling beneath our feet. Tyranny on a scale without parallel in the modern world, bestrides the continents from Spain to Japan and the law of brute force threatens to ride rough-shod over the entire earth. A glaring flow in the system of education in Ceylon is that it positively stunts the developement of qualities essential for a leader, by chaining every youngster to the undesirable rocks of excessive discipline. Discipline is necessary but an attempt to seclude the good from the bad, the strong from the weak etc is immensely detrimental.

"Seclusion is no secruity for Virtue" says Cardinal Newman. To look for perfection in man or even to hope for perfection is "to look for Helen's beauty in the brow of Egypt". As it is, the world to-day exposes in its utter nudity what discipline can. Hitler by stern discipline has dragged Germany to the very brink of an inevitable crash. He has been the chief cause rocking world civilizations to their very foundations.

Discipline is what man hates and it is a deliberate attempt — I say 'deliberate' because repeatedly educationists, scientists and psycho-analysts have strongly condemned it — to crush one's instincts thus making him a slave always to be led by a series of stringent set of rules and regulations. Man is a rational being and he has the power to reason. It is only a herd of sheep that needs guidance for 'sheep is a sheep" wherever it goes.

*Continued on page 6*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Romance of Co-education

*By* **Jr. Inters**

Times were when the Snr. and Jnr. Inters of this College were merely concerned with books and examinations. But what with the freedom of thought and expression granted to students, and the advent of a clique of romanticised young men, and gentlewomen the 'Varsity spirit seems to have entered our undergrads—Not to say that books are neglected.

Now we hear of a student ragged a freshmen's feed, and now also a "Love letter" from the head to some unfortunate.

Co-education brings in its wake many a funny situation. Soul full greetings and exaggerated chivalry one notices here and there. "I'm sorry" and "Oh do'nt worry!" are not infrequent.

There are expert cricket-players who go to play on the 2nd eleven pitch but get bowled out by 2nd eleven bowlers so absurdly that the little fellows get surprised.

Some misconstrue "If music be the food of love" into "If music be the means of love". For a few days. Junior-Inters were entertained by after-dinner music. In vain did some try to convey the notes of the love-lorn violin to the "Soul's abode" the wretched electric plant with its chuck! chuck! came in the way.

---

*Continued from page 5*

As it is, the future is ominous and we may have to utter A. G. Gardiner's words "We have supped so full of 'rules and regulations' we have become so habituated to the cult of 'discipline' that we have lost the faculty of indignation" and may never dream of rising up to Pitt's words "we alone can save ourselves and we can save 'the world' by our example".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# This or That

By **V. Buvanasundaram**

This world is full of knowledge, and knowledge of different kinds. It is difficult for one man to aquire all the knowledge. This task we leave to God Almighty but we should burden ourselves with the task of making atleast one branch. This branch we have to choose with a little guidance. Our choise will be good and appreciable if we choose the most useful branch.

Which is the most useful branch of knowledge? Undoubtedly Science!. In every twist and turn of your life you meet with science. The clothes that you wear, the books that you have, the pens that you possess and millions of various things that you have are all due to the most wonderful child of the goddess of learning.

Every boy and girl who comes up to the pre-matric form is confronted with the task of choosing either a Science Course an Arts Course. Why, ruffle your hair, and waste your time in trying to decide on your choice. Do not waver like the Prince of Morocco but without any hesitation choose Science.

What is the good in taking to an Arts Course, you study Latin. Latin! the dead language which has done no good to humanity except to change the useful citizens of the land into worthless lawyers who live on the fat of the land and the plunder of the poor.

History! ah! what is the earthly use of studying History. If the Magna Charta was signed by King John, what is that to us. Does that in anyway benefit our lives? People think that the study of history makes us imitate the great heroes and thus make our lives like their Nonsense! After all the preaching of Jesus Christ, and all the preaching about him, there is not a single Christian who is like him. The only person who is at least climbed the first few steps of his teaching is a Hindu saint, named Mahatma - Gandhi.

History, Latin and all the Arts subjects are useless to us. But Science, which has drawn out man from the sea of barbarism and set him on the high pedestal of civilization should be the branch of learning that should be pursued by every student if he wishes to be a useful citizen of his land.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ON TOILET

By

*"Arseety"*

O powdered face! A fool owns thee
Assuming charm and cheap beauty
Shun I thee and thy vile snares
For stupid youths,—quite unawares
Fall victims. Should that be so?
Quixotic youth they fall so low:
The lip-stick red scares men away
A signal! Danger! Stop; please stay.
The cosmetic makes faces thick
And tries oftimes to "play the trick"
True, Toilet makes lighter lasses
Fancied much by moonstruck asses

*The Editor,*
"YOUNG IDEA"

Sir,

Would you please inform my brothers and sisters of Jaffna College that by a motion moved by Mr. K. Jeyakody, the Colombo branch of the Alumny Association has decided to appoint a committee for the purpose of general assistance to the past and present students of the Alma Mater. The committee will be ready not only to guide students going outside Jaffna but even to get employment for them. The Executive Committee will soon draw up the details and inform you.

Thanks.

Colombo,
10-3-41.

Yours etc.
Old Boy.

---

# A Special prize in Geography

A Special prize in Geography offered by Mr. N. Kanagasingam of the Irrigation Department Hingurakgoda was won by K. Lakshmana Iyer of the Senior Intermediate in Arts class for scoring the highest yearly average in the subject in the Matric and the Collegiate classes.

The winner of the prize is also the first student to pass the Inter Arts with Geography from Jaffna College.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞாயிறு.

யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர் வெளியீடு

| புத். 6 | விக்கிரம௵ பங்குனிமீ ௧௬௨ செவ்வாய்க்கிழமை | இல. 4 |
|---|---|---|

# ஆசிரியர் குறிப்புகள்

## ஏது சரி? எது பிழை?

தமிழ் மொழி, பிற எந்த மொழிகளினதும் உதவி சிறிதேனுமின்றித் தனித்தியங்க வல்லது. எனவே அதனுள் ஆங்கிலச் சொற்களோ சமஸ்கிருதச் சொற்களோ ஒன்று இரண்டுதானும் புகுத்தப்படுதல் தமிழின் தூய்மையைப் பங்கப்படுத்தும் ஓர் பெரும் பிழையான காரியமெனக் கருதுகின்றனர் சில தனித் தமிழ்க் கட்சிக்காரர். ஒருவர் கருத்தை மற்றவருக்கு மிகவும் சுலபமான முறையில் வெளிப்படுத்துவதே எந்த மொழியினதும் முழு நோக்கும். எனவே ஆங்கிலச் சொற்களைக் கலந்தோ சமஸ்கிருதச் சொற்களைக் கலந்தோ கருத்தைச் சுலபமாக வெளிப்படுத்தினால்மட்டும் போதுமானது என்கின்றனர் எதிர்க்கட்சியார். இதில் யார் சரி? யார் பிழை? கூடியவரை தமிழ் மொழியின் தூய்மைக்குப் பங்கம் வராது பாதுகாத்தல் விரும்பப்படத்தக்கதே. எனினும் இன்றியமையாத இடங்களில் புதுச் சொற்களை ஆக்கியோ அல்லது பிறமொழிச் சொற்களைத் தமிழ்மொழி இலக்கணத்திற்கு ஏற்பத் திருத்தியோ உபயோகிக்க வேண்டும்.

பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் பெரும் வித்தியாசம் இருக்கின்றது. இது தமிழ்மொழி வளர்ச்சிக்கோர் தனிப் பெருந் தடையாய்க் காணப்படுகின்றது. ஆகவே எழுத்தாளர்களெல்லாரும் பேச்சுத் தமிழையே எழுத்திலும் கையாள வேண்டுமென்கின்றனர் சிலர். அது எவ்வாறு பொருந்தும்? சிதைந்த [illegible] இலக்கணம் பிறழ்ந்த வசனங்களும் மிகுந்த பேச்சுத் தமிழை எழுத்திலுங் கையாளுவது தமிழ்மொழிக்குப் பெரும் பங்கம் விளைப்பதாகுமன்றோ! அவை யிரண்டினதும் வித்தியாசத்தைக் குறைக்கவேண்டில் எழுத்துத் தமிழ்போல எல்லாரும் பேசுதல்வேண்டும் என்கின்றனர் வேறு சிலர். இவை யிரண்டினதும் வித்தியாசத்தை விலக்குவதற்கு எது வழி என்று எம்மைக்கேட்டால், எழுத்துத் தமிழ் திரிபுற்ற வழக்கற்ற சொற்கள் தவிர்த்து கூடியவரை மேலும் மேலும் எளியநடையில் எழுதப்படல் வேண்டும். பேச்சுத் தமிழும் சிதைந்த சொற்கள் தவிர்த்து இலக்கணப் பிழைகள் குறைந்து கூடியவரை மேலும் மேலும் தூய்மையடையவேண்டும். எனவே இரண்டும் ஒன்றை ஒன்று நோக்கி நடந்து இடைநடுவிற் சந்தித்தல் வேண்டும் என்றுதான் நாம் சொல்லுவோம்.

## நாடகக் கழகம் நலமடைவதாக

எமது கல்லூரியில் Matric வகுப்பு மாணவர்களுக்கு மாத்திரமென ஓர் நாடகக் கழகம் (Dramatic Society) ஏற்பட்டிருப்பதைச் சிலர் அறிவர். அக் கழகத்தினர் 'Silence is golden' எனும் பழமொழியைப் பொன்மொழியெனப் போற்றிக் கடைப்பிடிப்பதுதான் எமக்கு அதிக ஆச்சரியத்தைத் தருகின்றது. எனினும் சென்ற சில மாதங்களாகப் 'பூதத்தம்பி' நாடகத்தை ஆங்கிலத்தில் நடிப்பதற்கு அவர்கள் செய்யும் ஆரவாரம் கண்டு நாம் அளவிலா ஆனந் [illegible]கின்றோம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் முதற்பகுதியாகிய இயற்றமிழ்போல அதன் மற்றிருபகுதிகளாகிய இசை, நாடகத்தமிழ் வளர்ச்சியும் இன்றியமையாத தென்பதை நாம் முன்னரும் ஒருமுறை குறிப்பிட்டோம். Matric வகுப்பு மாணவர் மாத்திரமன்றி மற்ற எல்லா வகுப்புகளிலிருந்தும் ஏற்ற மாணவர்கள் யாவரும் இக் கழகத்தில் இடம்பெற வேண்டுமென்பது எமது விருப்பம். கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒருபகுதி தமிழ் நாடக வளர்ச்சிக்கெனத் தனியாக ஏற்படுத்தப்படல் வேண்டும். இசைத் தமிழின்றி நாடகத் தமிழ் சிறப்புடன் இயங்கமாட்டாதாதலால் ஓர் சங்கீத வகுப்பும் இத்துடன் இணைக்கப்படுவது இன்றியமையாததே. ஒரு வருடத்திலே ஒன்றோ அல்லது இரண்டோ நல்ல நாடகமாய்த் தெரிந்து நடிக்கக் கற்று நலத்துடன் நடித்துக் காட்டுவதோடுகூட புதுப்புது நாடகங்களை எழுதப் பழகுவதிலோ அன்றி வசனநடையிலுள்ள சிறு கதைகளை நாடக ரூபமாக்குவதிலோ மாணவர் ஊக்கப்படுத்தப்படல்வேண்டும். இங்கிருந்து கண்டிவரை சென்று நாடக நடிப்பில் தமக்குள்ள வீரமுந் திறமும் விளக்கக்காட்டிப் பேரும் புகழும் பெரிதும்பெற்ற ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் நிறைந்து மிருந்த எம் கல்லூரியில் நாடகத்தமிழும் நன்கு வளரவேண்டுமென்று நாம விரும்புவது ஓர் நல்லான காரியமன்றோ!

## பிரிய விடை வேண்டும்

நாடகத்தைப்பற்றிக் குறிப்பெழுதிய எமக்கு உலகம் ஓர் நாடகமேடை என்பது ஞாபகத்துக்கு வருகின்றது. எம் கல்லூரிகூட ஒரு பெரும் நாடக மேடைபோற் தோற்றுகின்றது. திரைகள் பலபலதோன்றி மறைகின்றன. நடிகர் பலரும் பெரியோர சிறியோர தத்தம் பகுதியைத் தாம் தாம் நடித்து வெவ்வேறு மேடைகளுக்கு வெளியுலகு செல்கின்றனர். எமக்கேற்பட்ட பகுதி சிறிதானபோதிலும் அதை நாம் சிறுடன் நடித்தோம் என்றுமத்திர்ம் இருந்தால் எம் மனம் மகிழும்.

பத்திராதிபர் என்ற இப்பாடான பாரத்தைத் தாங்கமாட்டாது நாம் தத்தளிப்பதைக் கண்டு கருணைகொண்ட London University அச் சுமையை எமது தலையிலிருந்தும் எடுத்துவிட்டது. எடுக்கப்பட்ட அச்சுமையும் தன்னை ஏற்கக்கூடிய ஓர் தலையைத் தேடி நிற்கின்றது. தொடக்கத்திலே 'இளஞாயிறு' வளர்ச்சிபற்றி எம் உள்ளத்திலே சில சில சித்திரங்களைச் சித்திரித்திருந்தோம். 'இளஞாயிறு'பற்றி நாம் இடையிடையே எழுதிய ஊக்க மொழிகள் எல்லார் காதிலும் ஏற மறுத்தன. பலரும் பலவித பாராமுகங் காட்ட எம் சித்திரங்களும் சிதறுண்டுபோயின. ஏதோ சில 'நித்திய' கட்டுரைகாரர்களோடு கடினமான எம் காலத்தைக் கடத்திச் சென்றோம். எனினும் எம் 'நித்திய' கட்டுரையாளர்களுக்கு நாம் நிரம்பவும் கடமைப்பட்டுள்ளோமென்பதை மட்டும் ஒருபோதும் மறவோம். எம் இடத்துக்கு ஏற்பட்டிருக்கும் புது ஆசிரியரின் புது மொழிகளாவது எல்லார் காதிலும் ஏறுவனவாகி ஆக்கம் பலவும் அடைவனவாக. புது ஆசிரியரோடு புதுப் புதுக் கட்டுரையாளர்களும் புதிதாய்த்தோன்றி 'இளஞாயிற்'றைப் புதுப் புது முறையில் புகழுடைத்தாக்கிப் புத்துணர்வூட்டிப் புது உயிர் அளிப்பாரென நாம் பூரணமாய் நம்புகின்றோம். தமிழும் தமிழோடு சம்பந்தப்பட்ட எதுவும் தனியிடம் பெற்றுத் தழைத்து வளரவேண்டுமென்பது எம் பெருவிருப்பு.

கடந்த இருவருட எம் கல்லூரி வாழ்வில் எம் கல்வி விருத்திக்குக் காரணராயிருந்த பிரதம ஆசிரியருக்கும் எம்மைக் கற்பித்த எல்லா ஆசிரியர்களுக்கும் இன்னும் எமக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பேருதவி அளித்த பெரியோர் பலருக்கும் எம் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிப்பதுடன் அவர்களை அன்புகூர்ந்து எம்மை ஆசீர்வதிக்குமாறும் வேண்டுகின்றோம். சங்கங்களுக்கோ சபைகளுக்கோ எம்மைத் தலைவராகவோ பேச்சாளராகவோ தெரிவுசெய்து தம் அன்புப் பெருக்கால் எம்மை இன்பக் கடலுள் இருத்திய எம் சகோதர மாணவ மாணவிகளெல்லாருக்கும் என்றுங் குறையா எம் நன்றி கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய வீட்டுப் பெண்களுக்கு மாத்திரம்

*(Selected by the Editor from Kokila's Letters By Swami Vedachalam)*

நமது நாட்டிற் செல்வர் வீட்டுப் பெண்பாலரர் தமக்கு வேண்டிய வேலைகளைத் தாமே செய்தல் தாழ்வென நினைந்து வெறுமனே காலங்கழித்தலினாலன்றோ அவர்கள் கொடிய நோய்கள் பலவற்றிற்கு ஆளாகி ஆண்டு முதிராமுன்னரே கூற்றுவனுக்கு இரையாகின்றனர். செல்வர்களுக்கு வரும் நோய்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் ஏழை எளியவர்கட்கு வருகின்றனவா? இல்லையே. செல்வ மகளிர்கள் கருக்கொண்ட காலங்களிற் படுந் துன்பமும், அக்கருவை உயிர்க்கமாட்டாது நண்பகல் வெயிலிற்பட்ட புழுப்போல் துடிதுடித்து உயிர்மாளுங் கொடுமையும் உடம்பு வருந்த உழைக்கும் ஏழைப் பெண்பிள்ளைகளிடம் காணப்படுவதுண்டோ? சிறிதும் இல்லையே. ஒருகால் தெய்வச் செயலால் வருந்தி மகப் பெற்றாலும், அவர்கள் நீண்ட நாள் உடம்பு தேறாது மருத்துவர் சொல்லும் மருந்துங் கையுமாய்த் துன்புற்று நாட் கழித்தலும், அவர் ஈன்ற பிள்ளைகளும் அவர்களைப்போலவே நோய்ப்பட்டு வருந்துதலும் எத்தனையோ வீடுகளில் நம் கண்ணெதிரே நடந்து வருகின்றன. தம்மைச் செல்வரென்றும் மேல் நிலையில் உள்ளவரென்றும் இறுமாப்போடும் எண்ணி நடத்தலால் அடையும் பயன் இதுதானா? பிழையான எண்ணத்தினால் தாம் துன்புறுவதல்லாமலும், தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும், தம் பிள்ளைகள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் இங்ஙனமே கால்வழி கால்வழியாக நோய்வாய்ப்பட்டு நொந்து மாயும்படி செய்வதும் செய்விப்பதும் எவ்வளவு பேதமை! எவ்வளவு கொடுமை!! தாம் கெட்டாலும் தம் பிள்ளைகளையாவது சீர்திருத்தக்கூடாதா? பிள்ளைகளைக் காலையில் எழச்செய்து, காலைக் கடன்களை முடித்துத் தலை முழுகிப் பூத்தொடுத்துச் சாந்து அரைத்து இறைவன் திருவுருவ அடையாளங்களுக்குத் திருமுழுக்குச் செய்வித்து அவற்றைச் சாத்தி, அணிகல் புனைத்துக் கற்பூரங் காட்டி, இறைவனைத் தொழுது பாட்டுப்பாடி வணங்கும்படி ஏவுதல்வேண்டும். இவ்வாறு செய்யாமற் செல்வர் வீட்டுப் பிள்ளைகள் காலையில் எட்டு மணி வரையில் தூங்கி எழுந்து பல்கூட விளக்காமல் 'காப்பி' 'ரொட்டி' என்று கூவுகின்றன. இத் தீய வழக்கத்தைச் செல்வர்கள் அறவே ஒழித்துவிடல் வேண்டும். கடவுளைத் தொழுதபின் சிறிது நேரம் இருந்து கல்வி கற்றல்வேண்டும். பெண்பிள்ளைகள் வீட்டிலிருப்பவர்களாயிருந்தால் காலையிற் கல்விகற்ற சிறிது நேரம்போகப் பிறகு சமையற்றொழிலுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் திருத்தமாகவும் நேர்த்தியாகவும் திறமையாகவும் கற்றுக்கொள்ளல் முதன்மையாகும். உடம்பை நோய் அணுகாமற் பாதுகாத்து வளர்ப்பதற்குச் செவ்வையான உணவே இன்றியமையாக் கருவியாக இருப்பதனால் நாவிற்கு இனிமையும் உடம்பிற்கு நலமும் தரும் பலவகை உணவுப் பொருள்களையுங் கூறுபாடு அறிந்து சமைத்து வைத்தலைக் காட்டிலும் மேலான தொழில் பெண்மக்களுக்கு இல்லை. ஏனென்றால், உடம்பு செவ்வையான நிலைமையிலிருந்தால்தான் எல்லா நன்மைகளையும் அடையலாம். ஆதலாற் சமையற்றொழிலைத் தாழ்வாக நினைத்து அதனை ஏவற்காரர் கையில் விட்டிருப்பது சிறிதும் விரும்பத்தக்கதன்று. இதனாற் பல தீங்குகள் உண்டாவதை வழக்கத்திற் பலரும் பார்த்துங் கேட்டுமிருக்கலாம். மேலும், சமையற்றொழிலைச் செய்யுங்கால், அடிக்கடி நிமிர்ந்துங் குனிந்தும் நடந்தும் உடம்பு பலவாறு அசைதலால் உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களும் செவ்வனே அசைந்து இரத்தம் நன்றாய் ஓடவும் நரம்புகள் வலியேறவும் அவற்றால் நன்றாய்ப் பசியெடுக்கவும் வேண்டுமளவுக்கு உண்ட உணவு செரிக்கவும் இடம் உண்டாகின்றது. அதன்மேலும் நெருப்பண்டையி லிருத்தலால் உடம்பு நன்றாய் வியர்க்க இரத்தத்திலுள்ள நச்சுப் பொருள்கள் உடனுக்குடன் வெளிப்பட அதுவுந் தூயதாகின்றது. இவற்றோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பண்டங்களைப் பதம் அறிந்து ஒன்றுகலந்து இன்சுவைப்பட ஆக்கவேண்டியிருத்தலால் அவ்வேலையில் முனைந்து நிற்கும் அறிவுங் கூர்மையாகின்றது. இங்ஙனம் பலவகையாலும் பெண்மக்களுக்குச் சிறந்ததாகக் காணப்படும் சமையற்றொழிலை இகழ்ந்து கைவிட்டிருத்தலைக் காட்டிலும் வேறு தீமை பெண்பிள்ளைகளுக்கு யாது இருக்கின்றது? இனிச் சமையல் செய்து உணவெடுத்துச் சிறிது இளைப்பாறியபின், சிறிது தையல் வேலையிற் பழகி அதன்பின் அரிய பல நூல்களையும் வீணை முதலான இசைக் கருவிகளையுங் கற்றலிற் கருத்து ஊன்றல்வேண்டும். இங்ஙனஞ் செய்தலை விடுத்து நம் நாட்டுப் பெண்பாலாரிற் பலரும் ஓய்வான நேரங்களில் அண்டை வீட்டுப் பெண்பிள்ளைகளை அழைத்து வைத்துக்கொண்டு வீணான பேச்சுப் பேசுவதிலும் தாயம் ஆடுவதிலும் பிறரை வம்புக்கு இழுப்பதிலும் தூங்குவதிலுங் காலத்தைப் போக்குகின்றனர். செல்வர் வீட்டுப் பெண்பிள்ளைகளையும் ஏழை வீட்டுப் பெண்பிள்ளைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏழைப் பெண்மணிகளே மிக மேலானவர்களாயிருக்கின்றார்கள்.

வயிற்றுக்கில்லாமையால் எளிய பெண்கள் நெல்லுக் குத்தியோ இலை தைத்தோ மா அரைத்தோ விறகு விற்றோ பிறர் இட்ட ஊழியஞ் செய்தோ தமது காலத்தை ஒரு நொடியும் வீணே கழியவிடாமல் தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படியான வழிகளிற் செலவிடுகின்றார்கள். இந்த இருதிறத்தவர் நிலைமைகளையும் எண்ணிப்பார்க்குங்கால் செல்வர் வீட்டு மாதர்கள் செல்வத்தாற் பெற்ற பயன் சிறிதும் இல்லையென்பது புலனாகின்றதன்றோ? செல்வத்தைப் பெற்று இங்ஙனஞ் சீரழிவதைப் பார்க்கிலும் வறுமையிற் செம்மையாயிருத்தலே பெண்மக்கட்கு சிறந்ததாய்க்காணப்படுகின்றது.

## Inter Arts பரீட்சையிற் சித்தியெய்திய நம் கல்லூரி மாணவரின்பேரில்

# ஓர் ஆனந்தக் கும்மி

M. Thambimuttu L. M. B.

("ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்றமெட்டு)

ஆனந்தக் கடல்அலை மோதுது தேபெருகும்
ஆர்வங் கரைபுரண் டோடுதே
ஏனந்த மாதிரி எங்கட்கி ருப்பது
இப்போ நவில்வேன்இக் கும்மியிலே.

ஆனதோர் பங்குனி மாதத்தி லேயதில்
அரிய முதற்றிங்கட் கிழமையது
மாணவர் நாமொன்றாய்க் கூடி மகிழ்வுறும்
மட்டிலாப் பரிசளிப் பாகுமாம்.

அன்ன தினத்திலே ஆறரை மணியிலே
ஐயாரம் பக்கர்க்கோர் செய்தியுண்டு
என்னது? என்னது? என்னது? என்னது?
என்று வினவுதல் இயல்பல்லவோ.

இன்டர் பரீட்சையில் ஈடுபட் டோருள்ளே
எங்கள்நல் லாரியார் ஈரேழுபேர்
அங்கவர் குட்சித்தி பன்னிரண் டாதலால்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே.

என்றென்றும் இலகும் இலங்கா [illegible]
இனியனும் வச்சிமணைச் செ[illegible]

துன்று சுவைதரும் குதலைக் கணபதி
ஆயவ ளாம்புத்தூர் அன்னைமகன்.

பண்டைத் தெருப்பன்னை பாலக னும்எங்கள்
பாசமுடை மீண்டர் குசைப்பிள்ளை
கண்டு களிப்புறும் காசில் புகுடனும்
கனவான் சபாபதிப் பிள்ளைஎன் போன்.

எங்கள் இலங்கையின் நாயக மாம்இலனும்
ஏதமில் லான்ஜெய வீரசிங்கம்
மங்கள மான நடராசா உவெல்ச்சொடு
மார ராலிசிவ ஞானமென்பார்.

நாடியே நம்மவர் நாவாற் புகழ்ந்திடும்
நவரத்ன நாமமுடன் சாண்நவின்றேன்
பாடியே தான்சபா நாயகன் தன்னையும்
பகவீய ஜனகனும் ஆவர்என்றேன்.

மாண்புடை நேசரே! மணிமொழி மாதரே!
வாருங்கள் நாமொன்றாய்க் கூடிநின்று
'நீண்புகழ் ஆயோராய் நீடுப் பீர்' என்று
இத்தகம்நல் வாழ்த்துகள் நிரைத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

"சிவம்"

உலக சரித்திரத்தின் கற்பனை சாரத்தை, அமெரிக்க சரித்திர நிபுணராகிய Dr. Charles Beard என்பவர் நாலு வசனத்தில் பின்வருமாறு சுருக்கிக் கூறியிருக்கின்றார்:—

1. கடவுள் தாம் அழிக்க விரும்புவோரை, வலிமையில் பித்தத்தன்மை எய்தச் செய்வார்.

2. கடவுளின் திரிகை ஆறுதலாக அரைத்தபோதிலும், மிகவும் நுண்ணியதாய் அரைக்கும்.

3. தேனீ, திருடும் புஷ்பத்தை செழிப்பிக்கும்.

4. நிறைந்த கங்குலிலேயே விண்மீன்கள் துலங்கும்.

* * *

ஒருவர் தாம் இக்கருமுறையும் வழக்கம் போல் சோதனையில் சித்தியின்மை என்று சோதனை மறுமொழி வரின், தாம் கட்டாயமாகத் தற்கொலை செய்துவிட்டு எங்கேயாகிலும் ஓடிச் செல்வதாக (I will commit suicide and run away) அறை கூவுகின்றார்!

* * *

சென்ற வியாழக்கிழமை (13-3-41) உபாத்தியார்த்திகளின் (Academy) ஆதரவில், யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பிரதம ஆசிரியராகிய திரு. சி. சுவாமிநாதன் அவர்கள், "தமிழும் சரித்திரமும்" என்னும் தலையங்கம் கொண்ட விஷயத்தில் பாண்டித்தியம் நிரம்பிய ஓர் அரிய சொற்பொழிவாற்றினர்.

* * *

உலகத்தில் தற்பொழுது நிலவும் பாஷைகளின் தொகை 3064 எனக் கணக்கிட்டிருக்கின்றனர். இதில் பிரித்தானிய மொழியாராய்ச்சியாளராகிய ஜோர்ச் கிரயர்சன் என்பவர் 179 இந்திய பாஷைகளில் போதிய பயிற்சியுள்ளவராயிருக்கிறாராம்.

—'ஈழகேசரி'

* * *

உலகத்திலுள்ள மாடுகளின் தொகை 690,000,000. இதில் இந்தியாவில் தொகை 215,000,000. —'ஈழகேசரி'

* * *

இயற்கை பெண்களுக்குப் போதிய வலிமையைக் கொடுத்ததினால், நீதிசாஸ்திரம் அவர்களுக்குச் சொற்பமே கொடுக்கிறதென்று Dr. Samuel Johnson அவர்கள் சொல்லியிருக்கின்றார்.

* * *

'திருவடிநிலை'யில் கிரிகரணைசத்தி செய்யப்போகும் மாணவருக்கும் ஆசிரியருக்கும் ஓர் எச்சரிக்கை. கள்வரும் கொள்ளைக்காரரும் நிறைந்த அவ்விடத்தில் உமது ஆடைகளைக் களைந்து 'காரில்' வைத்துவிட்டு மாத்திரம் கடலுள் நீராடச் சென்றுவிடாதீர். அவ்விதம் செய்வீரேல் வெற்றுடம்புடன் வீடு திரும்பவேண்டி நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மசீலனின் சாமர்த்தியமா?

## அல்லது

# பெற்றோரின் மடமைத்தனமா?

By A. Ponnambalanathan.

இரத்தினூழ்வார் ஓர் பிரபல வக்கீல். அவர் மனைவி பெயர்தான் ராசலட்சுமி. இவர்களிருவரும் பிள்ளையில்லாது வருந்துவதைப் பார்த்த எம்பெருமான் தர்மசீலனென்னும் ஓர் அழகு வாய்ந்த புத்திரனை அளித்தார். அவன் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கல்வியறிவில் சிறந்தவனாய் விளங்கினான். பல ஆண்டுகள் கழிந்தன. ஆங்கிலக்கல்லூரியில் படித்து வருகிறான். உண்ண ஊணும், உடுக்க உடையும் தளம்பாது இரத்தினூழ்வார் மகனுக்குக் கொடுத்ததுமன்றிச் செலவிற்கும் பணம் நிறையக் கொடுத்துவந்தார். வீண் செலவுகளில் ஈடுபடாது ஏழைகளுக்குக் கொடுப்பதிலும் நல்வழியிற் செலவழிப்பதிலுமேயே தர்மசீல னீடுபட்டான்.

தனிப் புதல்வனாகப் பிறந்த ஒருவனுக்குச் சகல நற்குணங்களும் பொருந்துவது அருமை. தர்மசீலன் நற்குணமாயிருந்த போதிலும் ஈற்றில் கூட்டுறவாளர்களின் மோகத்தால் பீடி சிகறற் புகைக்கவும் பல தூர்ச் செயல்களைச் செய்யவும் தொடங்கிவிட்டான். இவ்வளவு பணமேனெனக் கேட்டிற தர்மசீலன் இப்போது பணம் பற்றாது பற்றுதெனத் தொடங்கினான். மாதமொருமுறை சினிமாவுக்குப் போனவன் இப்போது கிழமைக் கிருமுறை போக ஆரம்பித்துவிட்டான்.

இரவு சுமார் 7-30 மணியிருக்கும். நீல வானிற் பூரண சந்திரன் தோன்றி எங்கும் வெண்ணிலாப்பரப்பியவாறிருந்தனன். சற்று முன்பதாகத்தான் தர்மசீலன் 'ரீகல்' தியேட்டருக்கு மீனாட்சி கல்யாணமென்னும் ஓர் தமிழ்ப் பேசும் படம் பார்க்கச் சென்றனன்.

அதே சமயத்தில் இரத்தினூழ்வார் தன் மகனின் அறைக்குட் சென்றார். மேசைமேல் ஒரு கடிதத்தைக் கண்டார். அதை எடுத்து வாசித்தார். அக்கடிதம் சகுந்தலை என்னும் ஓர் பெண்ணால் எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தை வாசித்ததும் இரத்தினூழ்வார் கோபங்கொண்டு தன் மனைவியைக் கூப்பிட்டு அக் கடிதத்தைக் காட்டி "பார்த்தாயா, உன்மகனின் தூர்ச்செயலை. அவனை ஒரு இடத்திற் சேர்த்துவிடாமென்றால், ஐயோ! என் செல்வப் புதல்வனையா? என்று ஆரவாரம் போடுவாய்" என்று சொல்லி மனைவிமுன்பு கடிதத்தை எறிந்துவிட்டு, தன் மகனுக்கு ஓர் ஆள் அனுப்பினர்.

இரவு சுமார் பத்து மணியிருக்கும் அப்பொழுதுதான் தர்மசீலனும் படம் பார்த்துவிட்டு வீடுவந்து சேர்ந்தான். தாயார் மகனிடம் கடிதத்தைக் காட்டி அவனை ஒரே பார்வையாகப் பார்த்தாள். அவன் கடிதத்தைப் பார்த்துவிட்டு "கொல்" என்று சிரித்தான். தன் தந்தையைப் பார்த்து, "தந்தையே! உங்களுக்குக் கூட அறிவில்லையா? இதற்காகத்தானா எனக்கு ஆளை அனுப்பிப் படம்பார்ப்பதையுங் குழப்பினீர்கள். இக்கடிதம் துஷ்யந்த மகாராசனுக்குச் சகுந்தலை என்னும் பெண் அவன் பிரிவை ஆற்றாது எழுதிய லிகிதங்களில் ஒன்றல்லவா? இக்கடிதத்தை மற்றீக்குலேசன் பரீட்சைக்கு மொழிபெயர்க்கும்படி தந்த கேள்வியல்லவா?" என்று ஒரு போடுபோட்டான். தாய்தந்தையர் வெட்கித் தலைகுனிந்தனர். இது சீலனின் சாமர்த்தியமா? அல்லது பெற்றோரின் மடமைத் தனமா?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவசபைக் கூட்டம்

By A. Nadarajah (Old boy)

எவ்விடமும் ஒரே தங்கப் பேரொளி. தங்கம் உருக்கி வார்த்தாற்போன்ற அற்புதக் காட்சி. தரை, சுவர், தூண்கள் முதலியவையெல்லாம் அற்புதமாக விளங்கும் ஒரு சபாமண்டபம். எங்கும் ஒரே தங்க ஒளி வீசியதினாலே, எங்கேனும் தங்க மயமான மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருக்குமோவென்று சுற்றிச் சுற்றிப் பார்த்தும் அவ்வித விளக்குகள் எவ்விடமும் காணப்படவில்லை. கதிரவனது பொன்னிறக் கிரணங்கள் உள்ளே நுழைவதற்குக் கூட அம் மண்டபத்தில் யாதொரு இடமுமில்லை. அப்படியிருந்தும் அம் மண்டபம் பொன்மயமாகத் தோன்றுவதின் காரணம் என்னவென்பது எனக்குச் சிறிதும் புலனாகவில்லை. அதனால் அம் மண்டபத்திலிருந்தபடியே ஆச்சரியக் கடலில் மூழ்கி நின்றேன். இரு இமைகளும் அசைவற்று நின்றுவிட்டன. அம் மண்டபத்து நடுவில் விளங்கும் பொன்னாசனத்தில் கம்பீரமான தோற்றத்துடன் கூடிய சுந்தர புருஷனொருவன் அமர்ந்துகொண்டிருந்தான். அந்தச் சுந்தர புருஷனின் முன் அழகிற் சிறந்த ஒரு மங்கை நர்த்தியமாடிக்கொண்டிருந்தாள். சிங்காசனத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட பற்பல ஆசனங்களில் பலவகைப்பட்ட ஆடவர்களும் பெண்மணிகளும் குழுமியிருந்தனர். அத்தகைய காட்சிகளைக் கவனித்தபின், அவ்விடம் தேவேந்திர மகா மண்டபமாகத்தானிருக்கவேண்டுமென்று யோசித்தேன்.

வீணை தாங்கிய தோற்றினராய் நாரத முனிவர் திடீரெனத் தோன்றிச் சபாநாயகரிடம் உத்தரவு பெற்றுப் பின்வருமாறு பேசத் தொடங்கினார்:

“சபையோரே! உலகமோ தற்போது மிக விந்தையாய்த் தோற்றுகின்றது. கல்வியிலே விருத்திபெற்றும் அநேகர் பேராசையென்னும் பேயினாலே அலைக்கப்படுகின்றனர். தற்போது ஹிட்லர் [illegible] செய்யும் யுத்தத்தைக் கண்டு அம்பலத்தில் ஆடும் நடராஜர்கூடப் பிரமித்து நிற்கின்றார். 25 வருட காலமாக அவ் ஹிட்லர் ஆயத்தம் செய்து யுத்தத்தை ஆரம்பித்துள்ளான். அப்படியிருந்தும் அவன் பிரித்தானியாவை வெற்றிகொள்ள முடியாது. தற்போது சுதந்தரத்துடன் சீவித்துவரும் மக்களை அந்த ஹிட்லர் அடிமைகளாக்கத் தெண்டிக்கின்றான். ஆனால் இந்த நோக்கம் ஒருபோதும் பயன்பெறாது.” இத்துடன் நாரதர் தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

பின்னர் கலைமகள் எழுந்துநின்று பின்வருமாறு பேசலானாள்:

“அன்பர்காள்! இன்றைய தமிழ்நாட்டில் எனது நிலை மிகக் கேவலமாக இருக்கிறது. தேச பக்தியையும் வீர உணர்ச்சியையும் பெருக்கவேண்டிய சீரிய கல்விக்குப் பதிலாக அயல்நாட்டுக் கல்வி தற்காலத் தமிழ்நாட்டிலுள்ள கலாசாலைகளிற் போதிக்கப்பட்டு வருவதைச் சிந்திக்குந்தோறும் என்மனம் பெரிதும் புண்படுகிறது. முற்காலத்தில் தமிழ் வளர்ச்சியடைந்த முறையை நம் நாட்டவர் அறியவில்லைப்போலும். என்னிடம் எவ்வளவோ அன்புகொண்டிருந்த மாணவர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையைச் சகிக்கமுடியாமல் என்னைப் பழிதூற்றும்போது, தூக்கிட்டுக்கொண்டு செத்துவிடலாமா என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. என்னையே மனப்பூர்வமாக நம்பி நிற்கும் ஏழை ஆசிரியர்கள் அனுபவிக்கும் கொடிய துன்பங்களைப் பார்க்கும்போது என் கண்களிலிருந்து தாரை தாரையாகத் துளிகள் சொட்டுகின்றன.” இவ்வாறு கலைமகள் யாவரும் விரும்பத்தக்கவாறு இனிமையுடன் பேசித் தமது இருப்பிடத்தில் அமரச் சுகதேவி சபையைநோக்கிப் பின்வருமாறு பேசத்தொடங்கினாள்.

“சகோதர சகோதரிகளே! ‘நோயற்ற [illegible]வே குறைவற்ற செல்வம்’ — என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மொழி தோன்றிய இவ்வுலகில், இன்று காணப்படும் மக்களிற் பெரும்பான்மையோர் பலவகைப் பிணிகளுக்கு அடிமைகளாகி மருந்துப் புட்டிகளையே தம் இனிய காலம் வரையும் வாழ்க்கைத் துணையாகப் பாவித்து வரும் நிலையை நினைக்க நினைக்க, என்மனம் தூண்டிலிற் சிக்கிய புழுவைப் போல் துடிதுடிக்கிறது. இப்படியான பிணிகள் வந்ததன் காரணம் தேவையற்ற பழக்கங்களைக் கைக்கொண்டதேயாகும். சாமையிலே பனட்டையும் பழஞ்சாத நீரையும் உணவாகக்கொண்டு பண்டைய ஏழைத் தேச மக்கள் உற்சாகமாகவும் திடகாத்திரமாகவும் இருந்தார்கள். அப் பழக்கத்தைக் கைவிட்டு மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டதினாலே அவர்கள் இன்றைய வாழ்காளிற் படும் துன்பத்தைக் காணும் பொழுது என்மனம் அனலிட்ட மெழுகு போல் உருகுகின்றது." இவ்விதமாகச் சிறிதுநேரம் சொற்பொழிவு செய்தபின் தனது ஆசனத்தில் அமர்ந்தனள்.

இதன்பின் பூமாதேவியானவள் எழுந்து இனிய மொழிகளில் பின்வருமாறு பேசலானாள்

"அன்பர்களே! இப் பூவுலகு முழுவதும் என் சொந்தச் சொத்தாகவேயிருந்தாலும் யாழ்ப்பாணநாடு மீதில் மட்டுந்தான் எனக்கு எல்லையில்லாத அன்பு. ஏனெனில் மக்களின் வாழ்வுக்குரிய பல சிறப்புக்குரிய வளங்கள் நிறைந்த நல்ல இடங்கள் யாழ்ப்பாணத்திலேயே மிருகியாயிருக்கின்றன. மேலும் பட்டுக்கோட்டை, ஆகாயத்தை அளாவிய பாரிய கட்டிடங்களைத் தன்னிடைக்கியும், அழகிய தென்கழனியால் சூழப்பட்டும் எக்கோழும் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தியவண்ணமாயிருக்கிறது. அத்துடன் எனது சிந்தைக்கினிய திருமால் தாற்றுக்கணக்கான திருக்கோயில்கள் இன்னும் மகிழ்ந்து குடிகொண்டிருப்பது யாழ்ப்பாண நாட்டில்தான். அத்தகைய யாழ்ப்பாண நாட்டிலே, என்து கருணை பொன்னதையே நம்பிச் சீவிக்கும் கமக்காரர்களில் மிகப் பெரும்பான்மையோர், வறுமையென்னும் தீப்பிணிக் கொடுமையைத் தாங்கமுடியாமல், உடல் மெலிந்து வலியிழந்து உற்சாகம் குன்றி நிற்பதைக் காணுற என்மனம் எரிகின்றது."

இவ்வாறு தேவசபை நடந்துகொண்டிருக்குஞ் சமயத்தில், எனது நண்பர் உமது அபிப்பிராயமென்னவென்று என்னை வினவ, உடனே நான் திடுக்கிட்டு எழுந்தேன். அப்போது எனது கண்ணெதிரில் பழைய மண்ணுலகமே காட்சியளித்தது.

# விகடப் பேச்சு

By CHANDRA, II B

டக்டர், வருத்தக்காரனுடைய கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக முடிவு சொல்லிவிட்டார். ஆனால் அந்த மனிதன், தான் இறக்கவில்லையென்பதாகக் கையால் ஜாடைசெய்தான். அதற்குள் அருகிலிருந்த அவன் மனைவி புருஷனை அதட்டி, "உனக்கு டக்டரிலும் பார்க்க ரொம்பத் தெரியும்போலிருக்கின்றது. வாயைப் பொத்திக்கொண்டிரு" என்றாள்.

* * *

கணவன் மனைவியை நோக்கி, "அடியே கண்ணாட்டி, செல்லப் பெண்ணாட்டி, நான் என்ன சொன்னாலும் நீ தட்டாமல் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கருக்காலிப் பொல்லினால்தான் உன்மண்டையில் போட்டுவிடுவேன்" என்றான். பல நாட்கள் கழிந்தன. கணவன் மனைவியைப் பார்த்து, "அடியே, தலையிலே உமியடி" என்றான்.

உடனே பனிச்சென்று கணவனின் தலையில் உமிழ்ந்துவிட்டாள் மனைவி!

* * *

மகன் : அப்பா, என்னால் தங்களுக்கு ரூபாய் 1000 வரும்.

தந்தை ; எப்படி?

மகன் : எங்கள் உபாத்தியாயர் என்னைப் பார்த்து, யானைக்குட்டி என்கிறார். யானை 1000 ரூபாய் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIBRARY
APR 1 1941
VADDUKODDAI, CEYLON.

PRINTED AT THIRUMAKAL PRESS, CHUNNAKAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org